## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 98/2023

பெயர் – ஜெயராஜ்(PW–1)

நாள் – 27.06.2025

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

**1)** வாதிகளும் நாங்களும் மாயநாதபுரத்தில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது N. மேட்டுப்பட்டி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பட்டா எண்.544 ஆகும். எனக்கு நன்கு எழுதப்படிக்கத் தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை, நிரூபண வாக்குமூலம் ஆகிவற்றில் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியும். அதேப்போல் என் தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்கள் குறித்தும் எனக்கு நன்கு தெரியும்.

2) வழக்கு சொத்தின் விஸ்திரம் எவ்வளவு இருக்கும் இருக்கும் என்றால் 2.13 செண்ட் இருக்கும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் கிழக்கு புறம் யாருடைய சொத்து உள்ளதென்றால் லட்சுமண நாயக்கருடையதும், மேற்கு பக்கம் நாராயணசாமி நாயக்கருடையதும், தெற்கு பக்கம் ராஜாராம் நாயக்கருடையதும், வடக்கு பக்கம் ராமசாமி நாயக்கருடையதும் ஆகும்.

3) தாவா சொத்தானது எனது தாத்தா கிருஷ்ணசாமி நாயக்கரின் பூர்வீக சொத்தாகும். கிருஷ்ணசாமி நாயக்கருக்கு வாரிசுகள்யார் யார் என்றால் இரண்டு பெண்கள் சீனியம்மாள், கணபதியம்மாள் ஆகியோரும், இரண்டு ஆண்கள் கணகராஜ், நாராயணசாமிநாயக்கர் ஆவார்கள். எனது பெரியப்பாவிற்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 8 பிள்ளைகள். எனது அப்பாவிற்கு 3 ஆண்கள், 2 பெண்கள் பிள்ளைகள் ஆவார்கள்.

4) எனது தாத்தா கிருஷ்ணசாமிநாயக்கரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2005 ம் வருடத்தில் (EX.P.A4) நாராயணசாமி நாயக்கர், ஜெயராஜ் மற்றும் சீனிவாசன் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணவத்தில் அவரது பெண் வாரிசு கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்தானது எனது தாத்தா கிருஷ்ணசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டதென்றும் அவர் இறந்த பின் அவரது வாரிசுகள் தனியாக பாகம்

பிரித்துக்கொண்டது சம்மந்தமாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

5) தபசில் சொத்தானது எனது தாத்தா கிருஷ்ணசாமிநாயக்கருக்கு பூர்வீகமாக பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கிடைச் சொத்தானது எனது தாத்தா கிருஷ்ணசாமிநாயக்கர் அவரது தாய்வழி பாட்டனிடம் இருந்து பெறப்பட்ட சொத்தாகும். தபசில் சொத்தானது பிரதிவாதியின் பூட்டனார் சின்னுத்தேவருக்கு பாத்தியப்பட்டதென்றும், அதை எனது தாத்தா கிருஷ்ணசாமி மோசடியாக கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல.

6) கடந்த 22.09.2023ம் தேதியிட்ட சொத்துத் தொடர்பான வில்லங்கச்சான்றிதழில் புலஎண்.544 ல் ஏக்கர் 2.13 செண்டில் தென்புறம் 2.10 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்தினை வங்கியில் அடமானம் வைத்தது நாராயணசாமி நாயக்கர் மட்டும் தான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள (Ex.P.A.4) கிரய ஆவணத்தில் ஆவண எண்.516/2005 ல் எனது தகப்பனார் கனகராஜ் என்பவரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கனகராஜ் தற்போது உயிரோடு இல்லை என்றால் சரிதான்.

7) எனது தகப்பனார் கனகராஜ் என்பவரின் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் செய்யவில்லை. 01.10.2023 ம் தேதி பிரதிவாதிகள் எனது சொத்திற்குள் அத்துமீறி வந்து பிரச்சனை செய்தார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் ஆள்பலம், பணபலம், அதிகாரபலம் பெற்றவர்கள் என பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்தானது மொத்தம் 5 ஏக்கர் 67 செண்ட் உள்ளடக்கியது என்று பிரதிவாதிகள் கூறுகிறார்கள் என்றால் சரியல்ல.

8) தபசில் சொத்தானது 1911ம் ஆண்டிற்கு முன்பாகவே N.மேட்டுப்பட்டியைச் சேர்ந்த கொடைவள்ளல் நாயக்கர் என்ற கோ.வெங்கடசாமி பூட்டனார் தானமாக சின்னுத்தேவருக்கு கொடுத்த சொத்து என்றால் சரியல்ல. இந்த சொத்தானது சின்னுத்தேவர் நல்லமுறையில் பராமரித்து ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும் அப்போது அரசு எடுத்த நடவடிக்கையான Re–Survey and Re–Settlement மூலமாக பிரதிவாதிகள் பூட்டனார் சின்னுத்தேவன் என்பவருக்கு பழைய பட்டா எண்.282 மூலமாக 2 ஏக்கர் 13 செண்டை செட்டில்மெண்ட் செய்து பதிவு செய்தார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

9) சின்னுத்தேவர் என்பவர் சித்தர் மற்றும் வைத்தியர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் N.மேட்டுப்பட்டி அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் நோய்வாய்பட்டவர்களுக்கு மருந்து வழங்கியும் அவர்களை குணமாக்கி வந்தார் என்றால் அது குறித்து நான் கேள்விப்பட்டதே இல்லை. சின்னுத்தேவர் என்பவர் ஜீவசமாதி அடைந்தார் என்றும் அந்த சமாதி வழக்கு சொத்தில் உள்ளதென்றால் தோட்டத்தில் கொஞ்சம் தள்ளியுள்ளது, அதாவது 2 ஏக்கர் 13 செண்டிற்குள் அந்த சமாதி வருகிறதா என்றால் வெளியில் வருகிறது.

10) வழக்கு சொத்தானது தற்போது சின்னுத்தேவர் பெயரில் தான் உள்ளதென்றும் நான் மோசடியாக பத்திரப்பதிவு செய்து அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் மோசடியாக பத்திரம் பதிவு செய்து அனுபவம் செய்து வருவதை இரத்து செய்வதை குறித்து பிரதிவாதிகள் வருவாய்துறையில் பட்டாவை இரத்து செய்ய தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளதென்றால் சரியல்ல. ஜீவசமாதியானது தோட்டத்திற்கு வடக்கு பக்கம் உள்ளது.

11) தோட்டத்தில் கிணறும், பம்புசெட்டும் உள்ளதென்றால் சரிதான். கிணறு, பம்புசெட்டில் இருந்து வடக்கு பக்கம் எவ்வளவு விஸ்திரம் வரும் என்றால் சுமார் 2 ஏக்கருக்கு மேல் இருக்கும். சின்னுத்தேவரின் ஜீவசமாதி வழக்கு சொத்தில் உள்ளதென்றும் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஜீவசமாதியின் வேலைகள் 01.08.2022 ம் தேதியில் இருந்து ஆரம்பித்து தற்போது வரை நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

12) சின்னுத்தேவரின் ஜீவசமாதி வழக்கு சொத்தில் உள்ளதென்றும், ஆனால் என்னுடைய வழக்கில் வேண்டும் என்றே மறைத்து மேற்படி வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் Plaint ல் 7 வது பாராவில் " மேற்படி வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள வழக்கிடைச் சொத்திற்கு சிறிதும் சம்மந்தம் இல்லாத இந்த பிரதிவாதிகள் " என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13) ஜீவசமாதியின் வேலைப்பாடுகள் முடிந்துவிட்டதென்றும் அதன் கும்பாபிஷேகம் நடைபெறப்போகிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஜீவசமாதியின் வேலைப்பாடுகள் நடைபெறுவது குறித்து தெரியும், கும்பாபிஷேகம் குறித்து தெரியாது. பிரதிவாதிகள் ஜீவசமாதி சாமி கும்பிடுவதைக் குறித்து எங்களுக்கு

பிடிக்கவில்லை என்றும், அதைத் தடுக்கும் பொருட்டு பொய்யான காரணங்கள் கூறி வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14) ஜீவசமாதியானது வழக்கு சொத்திற்குள் (2 ஏக்கர் 13 செண்ட்) உள்ளதா இல்லையா என்பதைக் குறித்து நீதிமன்ற ஆணையம் மூலம் அளந்து தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். மேற்படி தபசில் சொத்திற்குள் மேற்படி பிரதிவாதிகள் பூட்டன் சின்னுத்தேவன் என்பவரின் ஜீவசமாதி அமைந்துள்ளதா இல்லையா என்பதை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ய எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

15) நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்திற்குள் ஜீவசமாதியுள்ளதென்றும் அதை மறைத்து பிரதிவாதிகளின் உரிமைகளை தடுக்கும் வண்ணம் பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டிய வழக்கானது என்றால் சரியல்ல. அதேப் போல் நான் கேட்ட பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு மூலமானது பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.